## பருப்பு வகைகளுக்கான விலை முன்னறிவிப்பு

இந்தியா உலகின் மிகப்பெரிய பருப்பு உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோராக திகழ்வது மட்டுமல்லாது இறக்குமதியாளராகவும் உள்ளது. இந்திய அரசின் வேளாண் நல அமைச்சகத்தின் முதலாவது முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, **2021-2022** ம் ஆண்டின் **26.96** மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், **2019-2020** ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த பருப்பு உற்பத்தியில் **23.02** மில்லியன் டன்களை எட்டியுள்ளது. இதில் உளுந்து மற்றும் பச்சைப் பயறு, நாட்டின் மொத்த பருப்பு உற்பத்தியில் **16.93** மற்றும் **10.04** சதவீதம் பங்களிக்கின்றது.

### அ. உளுந்து

வேளாண் நல அமைச்சகத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, **2021-2022** ம் ஆண்டின் **2.66** மில்லியன் டன்கள் உளுந்து இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய பிரதேசம், ஆந்திர பிரதேசம், உத்திரபிரதேசம், தமிழ்நாடு, ஜார்கண்ட் மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை உளுந்து அதிக அளவில் பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும். இம்மாநிலங்கள் சேர்ந்து நாட்டின் மொத்த உளுந்து உற்பத்தியில் **89** சதவீதம் பங்களிக்கின்றன. இந்தியா, சீனா, பாகிஸ்தான், ஜப்பான் மற்றும் தாய்லாந்து ஆகியவை உளுந்து இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகளாகும். இந்த நாடுகள் முக்கியமாக மியான்மர், தாய்லாந்து, கனடா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றன.

தமிழ்நாட்டில் பொதுவாக **4.05** இலட்சம் எக்டர் பரப்பளவில் உளுந்து பயிரிடப்பட்டு **3.17** இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. கடலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகியவை உளுந்து உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். ஏ.டி.டீ **3**, ஏ.டி.டீ **4**, ஏ.டி.டீ **5**, கே.கே.எம் **1**, கோ **6**, வம்பன் **5** மற்றும் வம்பன் **6** ஆகிய உளுந்து இரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன.

தற்போது, உளுந்து வரத்தானது ஆந்திர பிரதேசம் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து வரத்தொடங்கியுள்ளது. மேலும், தமிழ்நாட்டிலிருந்து வரத்தானது வரும் மார்ச் முதல் வாரத்திலிருந்து வரத்தொடங்கும் என

எதிர்பார்க்கப்படுகிறது. மியான்மரிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உளுந்தானது உள்நாட்டு சந்தையின் விலையை பாதிக்கும் என வர்த்தக மூலகங்கள் கூறுகின்றன.

## ஆ. பச்சைப் பயிறு

வேளாண் நல அமைச்சகத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீட்டின் படி, **2021-2022** ம் ஆண்டின் **3.06** மில்லியன் டன்கள் பச்சை பயிறு இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இராஜஸ்தான், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகா, பீகார், ஆந்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகியவை பச்சைப் பயறு உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். இம்மாநிலங்கள் சேர்ந்து நாட்டின் மொத்த பச்சைப் பயறு உற்பத்தியில் **79** சதவீதம் பங்களிக்கின்றன. மியான்மர், சீனா, தான்சானியா, மொசாம்பிக் மற்றும் இந்தோனேசியா ஆகியவை பச்சை பயிறு இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகளாகும்.

தமிழ்நாட்டில், சுமார் **1.71**இலட்சம் எக்டர் பரப்பளவில் பச்சைப் பயறு பயிரிடப்பட்டு **0.76** இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. திருவாரூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, கடலூர், திருவள்ளூர், சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகியவை தமிழகத்தில் பச்சைப் பயறு உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும். கோ **6**, கோ **7**, கோ **8** மற்றும் வம்பன் **3** ஆகிய பச்சைப் பயறு இரகங்கள் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் தேசிய விவசாய கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு ஆனது இப்பயிர்களை கொள்முதல் செய்யும் நிறுவனம் ஆகும். தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் பச்சைப்பயிர் கொள்முதல் ஏற்கனவே பிப்ரவரியில் தொடங்கிவிட்டது மற்றும் உளுந்து திருநெல்வேலி, திண்டுக்கல், புதுக்கோட்டை, அரியலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு

மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 20ஆண்டுகளாக விழுப்புரம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய உளுந்து மற்றும் பச்சைப் பயறு விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வுகளின் அடிப்படையில், அறுவடையின் போது தரமான உளுந்தின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 65-67 வரை இருக்கும் மற்றும் நல்ல தரமான பச்சைப் பயறு சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ63-65 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. மேலும், பிற மாநிலங்களிருந்து வரும் வரத்து மற்றும் இறக்குமதியை பொறுத்து விலையில் மாற்றம் இருக்கும். தற்போது, நெல் தரிசு பகுதிகளில் உளுந்து மற்றும் பச்சைப் பயறு அறுவடை தொடங்கியுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

அ.) உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி -0422-2431405

ஆ)இயக்குனர் மற்றும் முனை அதிகாரி
தமிழ்நாடு பாசன விவசாய நவீனமாயமாக்கல் திட்டம்
நீர் தொழிட்நுட்ப மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி -0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்
பயறுவகைத்துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி - 0422 -2450498

# Price Forecast for Pulses

India is the largest producer, consumer and also the largest importer of pulses in the world. As per the First Advance Estimates by the Ministry of Agriculture, Government of India, total pulses production in India was 26.96 million tonnes in 2021-22. The total pulse production of the country is reached 23.02 million tonnes during 2019-20. Blackgram and Greengram accounted for 16.93 and 10.04 per cent respectively in the total pulses production of India during 2019-20.

## A. Blackgram

According to the First Advance Estimates of Ministry of Agriculture and Farmers Welfare (2021-22), the production of blackgram is 2.66 Million tonnes in India. The major states producing blackgram are Madhya Pradesh, Uttar Pradesh, Andhra Pradesh, Tamil Nadu, Jharkand and Maharashtra accounting for 89 per cent of the total blackgram of the country. The major consuming cum importing countries of black gram are India, China, Pakistan, Japan and Thailand. These countries import mainly from countries like Myanmar, Thailand, Canada and Australia.

Blackgram is normally cultivated in Tamil Nadu in an area of 4.05 lakh hectares with a production of 3.17 lakh tonnes. Cuddalore, Nagapattinam, Viluppuram, Thanjavur and Tiruvarur are the major districts cultivating blackgram. Major cultivars are ADT 3, ADT 4, ADT 5, KKM 1, CO 6, VBN (Bg) 5 and VBN

Blackgram arrivals from Andhra Pradesh and Madhya Pradesh have already started and it is expected that arrivals from Tamil Nadu will commence from the March first week. Trade sources also stated that blackgram imports from Myanmar will also affect the domestic prices of blackgram.

**B. Greengram**

According to the First Advance Estimates of Ministry of Agriculture and Farmers Welfare (2021-22), the production of Greengram is 3.06 Million tonnes in India. The major greengram producing states are Rajasthan, Madhya Pradesh, Maharashtra, Karnataka, Bihar, Andhra Pradesh and Tamil Nadu. These states together contribute for 79 percent of total greengram production. Importing countries of greengram are Myanmar, China, Tanzania, Mozambique and Indonesia.

Greengram is annually cultivated in Tamil Nadu in an area of 1.71 lakh hectares with a production of 0.76 lakh tonnes. Greengram is cultivated in Thiruvarur, Nagapattinam, Thoothukudi, Cuddalore, Thiruvallur, Salem and Thanjavur. Major varieties under cultivation in the state are CO 6, CO 7, CO 8 and VBN 3.

The National Agricultural Cooperative Marketing Federation of India (NAFED) is the nodal agency for procurement of these pulses. Procurement has already begin on February 1 in the districts of Thoothukudi, Virudhunagar and Tiruvallur, all for greengram, and Tirunelveli, Dindigul, Pudukottai, Ariyalur, Tiruvannamalai, Cuddalore, Villupuram and Tirupur besides Thoothukudi, all for black gram.

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University analyzed the past 20 years prices for blackgram and greengram that prevailed at Viluppuram Regulated Market. As per the results of the analysis, the farmgate price of good quality blackgram will be Rs. 65-67 per kg. Good quality greengram farmgate price will be around Rs. 63-65 per kg and fluctuation would be subjected to the variations in the arrivals from the major production centres and imports from other countries. Now harvesting season has commenced for greengram and

blackgram especially in the rice fallow areas. Hence, farmers are advised to take appropriate selling decision accordingly.

***For further details contact:***

*i).Domestic and Export Market Intelligence Cell*

*Centre for Agricultural and Rural Development Studies (CARDS)*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-2431405*

*ii).The Director and TN-IAMP Nodal Officer*
*Water Technology Centre*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone: 0422-6611278*

***For Technical Details please contact***

*Professor and Head*
*Department of Pulses*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore-641003*
*Phone: 0422-2450498*